**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 24.10.2024 |
| Case No. | : **O.S.399/2019** | Nationality | : Indian |
| Name | : ஆரிட்மேரி | Religion | : |
| Father's/Husband's Name | : ஆரோக்கியசாமி | Age | : 38 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மலேசியாவில் வசித்து வருகிறேனா என்றால் மலேசியாவிலும் இந்தியாவிலும் மாறி மாறி வசித்து வருகிறேன். ஆரோக்கியசாமி எனது தந்தை என்றால் சரிதான். எனது தந்தைதான் இவ்வழக்கில் பொது அதிகார முகவராக உள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா வழக்கிற்காக சாட்சி சொல்ல அழைத்ததால்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமாவான வாதி லியோனார்டு தேவசகாயத்திற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். வாதி நீதிமன்றத்தில் இன்று ஆஜராகி உள்ளாரா என்றால் ஆஜராகி உள்ளார். தாவா சொத்து என்ன என்பது எனக்கு தெரியாது என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் மானம்பாடி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்களுக்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் பார்த்துள்ளேன் என்றால் RSR மற்றும் OSR ஆகியவற்றை பார்த்துள்ளேன். கிரய ஆவணங்கள் எதையும் பார்த்துள்ளேனா என்றால் தாவா சொத்துக்கள் கிரயம் வாங்கப்படவில்லை. பரம்பரையாக அனுபவித்து வந்த

சொத்துக்களாகும். அதனால் கிரய ஆவணங்கள் எதுவும் இல்லை. தெய்வசகாயத்திற்கு எத்தனை மனைவி என்றால் ஒரு மனைவிதான். தெய்வசகாயத்திற்கு 2 மனைவிகள் என்றாலும் நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. 1 முதல் 3 பிரதிவாதிகள் தெய்வசகாயத்தின் பரம்பரையில் எந்த கிளையில்இருந்து வந்தவர்கள் என்றால் அவர்களுக்கு தெய்வசகாயத்தின் பரம்பரைக்கும் சம்மந்தம் இல்லை. அவர்களை எதற்காக வாதி வழக்கில் சேர்த்துள்ளார் என்றால் அவர்கள் நில அபகரிப்பு செய்துள்ளதால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார். 4ம் பிரதிவாதி தெய்வசகாயத்தின் பரம்பரையில் வரும் பாத்திமாசிசிலி என்பவரின் மகன் ஆவார். எனது பாட்டி பாக்கியம் தேவராஜின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி பாக்கியம் என்பவரின் மகன்தான் எனது தந்தை ஆரோக்கியசாமி என்றால் சரிதான். தெய்வசகாயத்தின் வாரிசு சான்றிதழை வாதி என்னிடம் காட்டியுள்ளாரா என்றால் வாரிசு சான்றிதழ் கோரி வாதி விண்ணப்பித்துள்ளார்.

3. வாதியும் எனது தகப்பனாரும் எதற்காக இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை அபகரித்துவிட்டதால் அதனை பெறவேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். பாத்திமாசிசிலி எனக்கு என்ன உறவு முறை என்றால் பெரியம்மா ஆவார். 4ம் பிரதிவாதி எனக்கு சகோதரர் முறை ஆவார். 4ம் பிரதிவாதிக்கும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது தகப்பனார் தயார் செய்து நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞரிடம் என்னால் விவரம் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது. தெய்வசகாயத்திற்கு 2 மனைவிகள் உள்ளார்கள்

என்றாலும் அதில்  முதல்தாரத்தின் அனைத்து வாரிசுதாரர்களையும் மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனது மாமா மற்றும் தந்தைக்காகவும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.25 15:31:38 +0000

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.